1974 மார்ச் 9]

திரு. ஜி. இராமசாமி : நமது அரசு சிறுபான்மையினருக்கு அவர்களுடைய தாய்மொழியில் கல்வி பயில வசதி செய்திருப்பதைப் போன்று மற்ற மாநிலங்களில் வசிக்கும் தமிழ் மொழி பேசுபவர்களுக்கும் அந்த மொழியில் கல்வி பயில வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அண்டை மாநிலங்களில்—ஆந்திர, கர்நாடக, கேரள மாநிலங்களில்—இத்தகைய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. குறைபாடுகள் ஏதாவது இருக்குமானால் ஸோனல் கவுன்சிலிலே அதைப் பேசி நாங்கள் தீர்த்துக் கொள்ளுகிறோம். இப்பொழுது இந்த நான்கு மாநிலங்களைப் பொறுத்தவரையில் பிரச்சினை ஏதும் ஏற்படவில்லை.

English medium schools

* 332 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to render assistance for starting of English medium schools in rural areas in the State; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே. பெரும்பாலும் நகர்ப்புறங்களில் கான்வென்ட் பள்ளிகள் இருந்து கொண்டிருக்கின்றன. கிராமப் புறங்களில் இருப்பவர்கள் கூட சென்னை, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் வந்து படிக்கிறார்கள். ஆகவே, அந்த வசதிகளைக் கிராமப்புற மக்களும் பெறும் வகையில் கிராமப்புறங்களிலும் இப்படிப்பட்ட பள்ளிகளைத் துவக்க யாராவது முன்வந்தால் அவற்றிற்கு அரசு மானியம் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் கொள்கைப்படி, தமிழை ஆட்சிமொழியாகவும் பயிற்று மொழியாகவும் கொண்டிருக்கிறோம். தமிழைத்

தாய் மொழியாகக் கொள்ளாமல் பிற மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டிருப்பவர்களுக்கும், அகில இந்திய அளவில் மாறுதல் (ட்ரான்ஸ்ஃபர்) ஏற்பட்டு, பிற மாநிலங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிற நிலையில் உள்ளவர்களுக்கும் இந்த வசதி வாய்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த நிலைமைகள் பெரும்பாலும் நகரங்களில்தான் ஏற்படுகின்றன. கிராமங்களைப் பொறுத்த வரையில் அந்த நிலைமைகள் ஏற்படவில்லை. ஆகவே தான், கிராமங்களைப் பொறுத்த வரையில், அரசாங்கத்தின் சார்பாக மானியம் தருவதற்கில்லை. தனியார் முயற்சியில் பல இடங்களில் கிண்டர்-கார்டன் ஸ்கூல்கள் ஏற்படுத்துகிறார்கள். மெட்ரிகுலேஷன் என்று இருக்கிறது. அது அரசாங்கத்தின்கீழ் வராது. பல்கலைக்கழகத்தின்கீழ் ஆரம்பிக்கப்படுகிறது. அதற்கு அரசாங்க மானியம் கிடைக்காது. அவர்கள் தனிக் கட்டணம் விதித்து அதை வசூலித்துக்கொள்ளலாம். அந்த நிலைமைகளில் எங்காவது ஆரம்பிக்க வேண்டுமென்று யாராவது விரும்பினால் அவர்கள் பல்கலைக் கழகத்தின் அனுமதியின்பேரில் நடத்தலாம்.

திரு. எம். சுரேந்திரன்: பல இடங்களில் கான்வென்ட் பள்ளிகள் நல்ல திறமையாகக் கல்வி போதனை அளிக்கின்றன என்ற காரணத்தினாலேயே கான்வென்ட் பள்ளிகளில் போய்ச் சேர்ந்து படிப்பது பெருமை என்ற ஒரு எண்ணத்தினால் பல உயர் சௌகரியம் உள்ளவர்கள், வசதி உள்ளவர்கள் அதிலே அவர்களுடைய குழந்தைகளைச் சேர்க்கிறார்கள். கீழே உள்ளவர்களுக்கு அதுபோன்ற நல்ல தரமுள்ள கல்வி கிடைக்கவில்லை என்ற குறை இருக்கிறது. கான்வென்ட் பள்ளிகளைப் போல் நம்முடைய மற்ற பள்ளிகளையும் அந்தத் தரத்திற்கு உயர்த்தவோ அல்லது நல்ல போதனைகள் அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவோ இந்த அரசாங்கம் வருங்காலத்திலாவது ஆவன செய்யுமா? இந்தப் பள்ளிகளையெல்லாம் ஒரு அதிகாரியின்கீழ் கொண்டு வருவதற்கு உரிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கான்வென்ட் பள்ளிகள் பெரும்பாலும் அரசாங்கத்தினிடம் மானியம் பெற்று நடைபெறுவதல்ல. நான் முதலில் குறிப்பிட்டபடி, மெட்ரிகுலேஷன் ஸ்கூலாக அமைந்திருக்கிறது; அல்லது, சென்ட்ரல் ஸ்கூலாக அமைந்திருக்கிறது. இந்த இரண்டு விதமான பள்ளிகளுக்கும் நாம் எத்தகைய மானியமும் தருவ

1974 மார்ச் 9]

தில்லை. அவர்கள் சென்ட்ரல் ஸ்கூலுக்கு ஒரு முழுத் தொகை கட்டிவிட்டு, மாணவர்களிடமிருந்து கட்டணங்கள் வசூலித்து அந்தப் பள்ளிகளை நடத்துகிறார்கள். மெட்ரிகுலேஷன் ஸ்கூல்களும் அப்படித்தான் நடத்தப்படுகின்றன. 15, 20, 25 ரூபாய் என்று இப்படிப் பலவிதமாகக் கட்டணம் வசூலிக்கிறார்கள். இப்படிக் கட்டணம் கட்டிப் படிக்கக்கூடிய தகுதி படைத்தவர்கள் உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். உடைக்கு மட்டும் ரூ. 200 முதல் ரூ. 300 வரை விதிக்கிறார்கள். அதையெல்லாம் கட்டக்கூடிய, அந்தச் செலவையெல்லாம் தாங்கக் கூடியவர்களின் பிள்ளைகளுக்கு ஒரு டிஸிப்ளின், கட்டுப்பாடு இருக்கத்தான் செய்யும்.

ஆனால், அரசாங்கத்தின் சார்பாகவும், ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாகவும் நடத்தப்படுகிற துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளில் ஒரே நிலையில் உள்ள பிள்ளைகள் மட்டும் படிப்பதில்லை; எல்லாத் தரப்புகளிலும் உள்ள பிள்ளைகள் சேர்ந்து பயிற்சி பெறு கிறார்கள். வசதி வாய்ப்புகள் உள்ளவர்கள் படிக்கும் தனிப் பள்ளிகளில் கல்வி தரும் அளவுக்கு நாம் ஓரளவு இங்கும் கவனம் செலுத்தி வருகிறோம். என்றாலும் கான்வென்ட் பள்ளிகளில் இருக்கும் தரம் உயர்ந்த அளவுக்கு இருக்கிறதென்றால், அங்கே பல தலைமுறைகளாகப் படித்த குடும்பங்களின் பிள்ளைகள் படிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஒரே நிலையுள்ள வசதி படைத்தவர்களின் குழந்தைகள் அத்தகைய பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக் கின்றார்கள். அங்கே கல்வித்தரம் நல்ல நிலையில் இருக்கிறது என்றால் அதில் வியப்பு இல்லை. ஆனால், அந்த நிலைக்கேற்ப மற்ற பள்ளிகளில் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம்தான் அரசுக்கு இருக்கிறது. ஆனால், மெட்ரிகுலேஷன் பள்ளிகள், சென்ட்ரல் பள்ளிகளை நாம் தடுத்து நிறுத்துவதற்கில்லை. சட்டப்படி அவை தனியாகத்தான் இயங்கும். அரசாங்கத்தின்கீழ் வரும் பள்ளிகளைத்தான் நாம் கட்டுப்படுத்த முடியும்.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, தரம் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்பதுதான் நம்முடைய அரசினுடைய கொள்கை ஆகும். சென்னை மாநகரத்திலே அரசி னுடைய பள்ளிகள், கார்ப்பரேஷன் பள்ளிகள் இவை தவிர்த்து, தனியார் நடத்துகின்ற உயர்நிலைப் பள்ளிகள் அல்லது வியாபார நோக்கத்தோடு நடத்தப்படுகின்ற நர்சரி பள்ளிகள் என்று

பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. உயர்தர வகுப்பினருக்குக் கிடைக்கின்ற கல்விச் சலுகை, வசதிகள் ஆகியவை எல்லாம் ஏழைகளுக்கும் கிடைக்கின்ற அளவுக்குச் சர்க்கார் சார்பிலே நடத்தப்படுகின்ற பள்ளிகளிலும், கார்ப்பரேஷன் சார்பிலே நடத்தப்படுகின்ற பள்ளிகளிலும் கிடைக்கச் செய்கின்ற அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்க ஆலோசிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதிலே பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. அதைப் போன்றே வாய்ப்புகளையும் வசதிகளையும் கொடுக்கவேண்டுமென்றால் இன்றைய நிலைமையில் பல்வேறு கார்ப்பரேஷன் பள்ளிகளிலே இடவசதி இல்லை, சில பள்ளிகளிலே இரண்டு ஷிப்டு முறைகள் நடத்தப்படுகின்றன, கார்ப்பரேஷன் பள்ளிகளிலே ஏற்கெனவே மூவாயிரம் பிள்ளைகள், இரண்டாயிரம் பிள்ளைகள், இரண்டாயிரத்து ஐந்நூறு பிள்ளைகள் என்ற அளவிற்கு பிள்ளைகள் உயர்நிலைப் பள்ளிகளிலே படிக்கிறார்கள். படிக்க வருகின்ற அத்தனை பேர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே அத்தனை மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள், ஆகவே இடவசதி, நிதி வசதி இவற்றிற்கேற்ப கவனம் இதிலே செலுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், கிராமங்களிலே இங்கிலீஷ் மீடியம் சொல்லிக்கொடுக்கின்ற பள்ளிகளைப் பொறுத்த வரையில் அவற்றிற்கு அஸிஸ்டென்ஸ் கொடுக்காவிட்டாலும் அரசாங்கம் அங்கீகாரமாவது கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நாம் இப்பொழுது அங்கீகாரம் தருவதில்லை என்ற ஒரு உத்தரவு போடலாம் என்ற நிலைமை இருக்கிறது. ஐந்தாம் வகுப்பு வரையில் அங்கே படித்து, மேலாக எந்தப் பள்ளியிலும் சேர்ந்து படித்துக் கொள்ளலாம். ஆறாவது வகுப்பு முதல் பத்தாவது வகுப்பு வரையில் நடத்தப்படுகின்ற பள்ளிகளைப் பொறுத்தவரையில் அங்கீகாரம் இல்லாமல் நடத்தக்கூடாது. ஐந்தாவது வகுப்பு வரையில் அங்கீகாரம் பெற்றுத்தான் நடத்த வேண்டும் என்பதில்லை. அங்கீகாரம் பெறாமலே நடத்திக் கொள்ளலாம்.

1974 மார்ச் 9]

திரு. வை. பாலசுந்தரம் : சென்னை நகரத்திலே, நகரச்சூழ்நிலை, சுற்றுப்புறத் தன்மை ஆகியவை எல்லாம் சேர்ந்து ஆங்கில அறிவு பெருகுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்துகிறது. ஆனால் மற்ற இடங்களிலே அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இல்லை. ஆகவே, கிராமங்களிலே உள்ள ஆரம்பப் பள்ளிகளிலே பட்டதாரி ஆசிரியர்களை நியமித்து ஆங்கில அறிவைப் பெருக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது துவக்கப்பள்ளிகளிலே மூன்றாவது வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்றுத்தரப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்கிலம் சொல்லிக்கொடுப்பது மட்டும் போதாது, ஆங்கிலம் எழுதுகின்ற முறையையும் ஆங்கிலத்திலே தேர்வு வைக்கின்ற முறையையும் கொண்டுவந்து இரண்டு வழிகளிலும் ஆங்கிலத்தைக் கற்றுத் தரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. உயர் துவக்கப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் பி.ஏ.பி.டி. படித்தவர்களாக இருக்கவேண்டுமென்று ஏற்படுத்தி அந்த முறையிலே சிலபல பள்ளிகளிலே படிப்படியாக நியமிக்கின்ற முயற்சி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களிலே ஆங்கில மொழியைப் பாடமொழியாகத் துவக்குவதற்கு உதவி செய்யாவிட்டாலும் தற்போது இருக்கிற பள்ளிகளிலே முதல் வகுப்பு முதலே ஆங்கிலத்தைப் பயிற்றுவிக்கச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஐந்தாவது வகுப்பு வரையில் படித்துவிட்டு ஆறாவது வகுப்பிலே எந்தப் பள்ளியிலும் சேர்ந்துகொண்டு படிக்கலாம் ஆறாவது வகுப்பு முதல் பத்தாவது வகுப்பு வரையில் இது வரையில் பள்ளிகள் நடத்தவேண்டுமென்றால் எக்ஸம்ஷன் வாங்கி நடத்தலாம் என்ற நிலைமையெல்லாம் இருந்தது. இப்பொழுது அப்படிப்பட்ட முறைகள் எல்லாம் இல்லை. அங்கீகாரம் வாங்காமல் நடத்தமுடியாது. ஆனால் 5-வது வகுப்பு வரையிலே உள்ள கிண்டர் கார்டன் போன்ற பள்ளிகளைப் பொறுத்தவரையில் எந்த விதமான இடையூறுகளோ தகராறுகளோ இல்லை.

திரு. கு. பெரியசாமி: தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினத்தில் ஆங்கில மீடியம் பள்ளி நடத்தவேண்டுமென்று உத்தரவு கேட்டு அமைச்சர் அவர்களுக்கு மனுச் செய்திருந்தார்களே, அதற்கு அரசு உத்தரவு கொடுத்து விட்டதா? அங்கீகாரம் அளித்து விட்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி வேண்டும். அதைப்பற்றிய தகவல் இல்லை.

Polytechnics

* 333 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the number of Government Polytechnics in the State from the year 1974-75;

(b) if so, the details thereof; and

(*c*) the courses that will be offered?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ & உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். வடிவேல்: தலைவர் அவர்களே, நம்முடைய மாவட்டத்திலே எத்தனை தொழிற் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன? தஞ்சை மாவட்டத்திலே எத்தனை இருக்கின்றன? அங்கே என்ன என்ன தொழில்கள் கற்றுத்தரப்படுகின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே 34 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அரசினர் சார்பாக நடத்தப்படுவது 11-ம் தனியார் துறையிலே நடத்தப்படுவது 17-ம் இருக்கின்றன, மற்றவை Institutions like leather and chemical technology என்ற முறையிலும் இருக்கின்றன. அவைகளிலே பல்வேறு பாடங்கள் சொல்லித் தரப்படுகின்றன. Civil Engineering, mechanical engineering, automobile engineering, cosmetic and electronics போன்றவை கற்றுத் தரப்படுகின்றன. பெண்களுக்கு தையற் கலை, ஒப்பனை என்று பல்வேறு வகையான பிரிவுகள் இருக்கின்றன. சென்னை சென்ட்ரல் பாலிடெக்னிக்கில் பல்வேறு பிரிவுகள் இருக்